[1971 டிசம்பர் 18

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, அவைமுன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விவரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இணைப்புச் சாலைகள், கருவிகள், உபகரணங்கள் வழங்குதல், குடிநீர் வசதி, கல்வி, கூட்டுறவு சங்கங்கள், வேளாண்மை, உழவுமாடுகள், வீடுகள் வழங்குதல் ஆகிய விவரங்கள் அடங்கிய பட்டியல் அவைமுன் வைக்கப் பட்டிருக்கின்றது. இவற்றைத் தவிர மேலும் என்ன வசதிகள் செய்யவேண்டும் என்று உறுப்பினர் விரும்புகிறார் என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விகள் கோவை மாவட்டத்தைப்பற்றி இருக்கவேண்டும். வடாற்காடு மாவட்டத்தைப்பற்றிக் கேட்கக்கூடாது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த மலைப் பகுதியில் உள்ள மலைசாதி மாணவர்களுக்குப் போதுமான சத்துணவு கொடுக்கவும், உடைகள் வழங்கவும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, சத்துணவுத் திட்டத்தின்கீழ் மலைவாழ் மாணவர்களுக்கும் சேர்த்து சத்துணவு அளிக்கப்பட்டு வருகிறது. சில இடங்களில் கம்பளிகளும் தரப்படுகின்றன. நலத்துறை மூலம் நடத்தப்படும் பள்ளிகளில் கம்பளியும் தரப்படுகிறது.

இனாம் நிலங்கள்

* *566* **வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை சட்டம் 26/63 Tamil Nalu Inam Estates (Abolition and Conversion into Ryotwari Act, 1963 மடங்கள், ஆதீனங்கள் இவைகளுக்கு நஞ்சை புஞ்சை நிலங்கள் சம்பந்தமாக நேரடி அனுபோகம் தேவையில்லை என்று தொடர்ந்து விதி விலக்கு அளிப்பதற்குக் காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்து சமய நிறுவனங்கள், சம்பந்தப்பட்ட கோட்டத் துணை ஆணையாளரின் இசைவினைப் பெறுமல் பண்ணைச் சாகுபடி செய்யக் கூடாது என்று இந்து சமய அறக்கட்டளைகள் துறை பிறப்பித்த விதிகள் தடைசெய்கின்றன. எனவே, அவர்கள் சொந்தமாகப் பயிர் செய்வதற்கு முற்றிலும் தடை செய்யப்படுகிறது. இது, இந்து சமய நிறுவனங்களுக்கு மிகுந்த இடர்பாடு விளைவித்தது. அவர்கள் செய்துகொண்ட முறையீட்டின் மேல், ரயத்துவாரிப் பட்டாக்களைப் பெறுவதற்காக, சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளபடி அந்த நிறுவனங்கள் சொந்தச் சாகுபடி செய்துள்ளனவாவென்று நிரூபிக்க வேண்டுமென்கிற நிபந்தனையிலிருந்து அவற்றிற்கு விலக்களித்து, அரசு 1966-ல் திருத்தச் சட்டம் ஒன்றை (தமிழ் நாடு சட்டம் 27/1966) இயற்றியது.